தினத்தந்தி 13 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்:

# 2-வது நாளாக இன்று வேட்புமனு தாக்கல்

ஈரோடு, ஜன.13-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 10-ந்தேதி முதல் தொடங்கி வருகிற 17-ந்தேதி வரை நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது.

அதன்படி முதல் நாளில் சுயேச்சை வேட்பாளர்கள் 3 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர். தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, வேட்புமனு தாக்கல் காலை 11 மணிக்கு தொடங்கி மதியம் 3 மணி வரை நடக்கிறது. நேற்று முன்தினமும், நேற்றும் விடுமுறை தினம். இதனால் 2-வது நாளாக இன்று (திங்கட்கிழமை) வேட்புமனு தாக்கல் நடக்கிறது. அதன் பின்னர் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நாளை (செவ்வாய்க்கிழமை) முதல் வருகிற 16-ந்தேதி வரை விடுமுறை விடப்பட்டுள்ளது. இதனால் 3-வது நாள் வேட்புமனு தாக்கல் கடைசி நாளான வருகிற 17-ந்தேதி நடக்கிறது. கடந்த 2023-ம் ஆண்டு நடைபெற்ற ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் அ.தி.மு.க. உள்ளிட்ட பிற கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் என மொத்தம் 77 பேர் களத்தில் இருந்தனர். ஆனால் இந்த இடைத்தேர்தலை அ.தி.மு.க., தே.மு.தி.க., பா.ஜனதா உள்ளிட்ட முக்கிய கட்சிகள் புறக்கணித்துள்ளன. இதனால் இடைத் தேர்தல் எந்தவித பரபரப்பும் இல்லாமல் உள்ளது. இதற்கிடையில் தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் வருகிற 17-ந்தேதி வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளார். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அறிவிக்கப்படாத நிலையில் அவர் எப்போது வேட்பு மனு தாக்கல் செய்ய உள்ளார் என்ற விவரம் தெரியவில்லை.

Erode East Assembly Constituency By-election
Today is the Second day for filing Nomination.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 13 JAN 2025

ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில்

## தேர்தல் அலுவலர்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம்


ஈரோடு, ஜன.13-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நடந்தது. அப்போது தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த அரசு அதிகாரியின் உதவியாளரான சந்திரமோகன் என்பவர் மாநகராட்சி அலுவலக வளாகத்தில் மயங்கி விழுந்து உயிரிழந்தார். இந்தநிலையில் ஈரோடு மாநகராட்சி அலுவலக வளாகத்தில் சிறப்பு மருத்துவ முகாம் அமைக்கப்பட்டு உள்ளது. ரத்தத்தில் சர்க்கரை அளவு, ரத்த அழுத்தம் போன்ற பரிசோதனை செய்யப்படுகிறது. இந்த முகாமில் அரசு அதிகாரிகள், தேர்தல் பணியில் ஈடுபடுபவர்கள், பொதுமக்கள் ஆகியோர் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

Special Medical Camp for the Election Officials in Erode Corporation Office.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 13 JAN 2025



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பணி ஒதுக்கீடு இணையதளம் மூலம் மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா ஒதுக்கீடு செய்தபோது எடுத்த படம். அருகில் தேர்தல் நடத்தும் அதிகாரி மனிஷ் உள்ளார்.

### வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு

# கணினி சுழற்சி முறையில் பணி ஒதுக்கீடு

ஈரோடு, ஜன.13-

வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு கணினி சுழற்சி முறையில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## 1,194 அலுவலர்கள்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந்தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இந்த தொகுதியில் மொத்தம் 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் 20 சதவீதம் கூடுதலாக சேர்த்து முதன்மை அலுவலர்கள், முதல் நிலை அலுவலர்கள், 2-ம் நிலை அலுவலர்கள், 3-ம் நிலை அலுவலர்கள் என தலா 284 பேரும், 1,200 வாக்காளர்களை கொண்ட வாக்குச்சாவடிகளுக்கு 4-ம் நிலை அலுவலர்கள் 58 பேரும் என மொத்தம் 1,194 அலுவலர்கள் பணியாற்ற உள்ளனர்.

## கணினி முறையில் பணி ஒதுக்கீடு

இவர்களுக்கு, ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா, தேர்தல் ஆணைய இணையதளத்தின் மூலம் கணினி சுழற்சி முறையில் முதல் கட்ட பணி ஒதுக்கீடு செய்தார். மேலும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு முதல் கட்ட பயிற்சி வகுப்பு வருகிற 19-ந்தேதி அன்று ஈரோடு ரங்கம்பாளையம் ஆர்.ஏ.என்.எம். கலை அறிவியல் கல்லூரியில் நடத்த திட்டமிடப்பட்டு, அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையாளருமான மனிஷ், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முஹம்மது குதுரத்துல்லா, தனித்துணை கலெக்டர் செல்வராஜ், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜன், அலுவலக மேலாளர் (பொது) பாலசுப்பிரமணியம், தேர்தல் தாசில்தார் சிவசங்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

Election duty for Booth Officials allotted by randomisation

Scanned with OKEN Scanner

தினமலர் 13 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் இன்று 2வது நாளாக வேட்பு மனு தாக்கல்

ஈரோடு, ஜன.13-

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் இன்று 2வது நாளாக வேட்புமனு தாக்கல் நடக்க உள்ளது.

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் வரும் பிப். 5ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் கடந்த 10ம் தேதி (வெள்ளி) தொடங்கியது. விடுமுறை நாட்கள் தவிர்த்து 10, 13, 17 என 3 நாட்கள் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்ய முடியும் எனும் சூழல் உள்ளது. அதன்படி 13 (இன்று) 17 என 2 நாட்கள் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்ய முடியும்.

இதில் முதல் நாளான 10ம் தேதி சுயேச்சை வேட்பாளர்கள் 3 பேர் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர். தேர்தல் கமிஷன் அறிவிப்பின்படி வேட்பு மனு தாக்கல் காலை 11 மணிக்கு தொடங்கி பிற்பகல் 3 மணி வரை நடைபெறுகிறது.

இந்நிலையில் இன்று (திங்கள்) 2வது நாளாக வேட்பு மனு தாக்கல் நடைபெற உள்ளது. கடந்த 2021 முதல் திமுக தலைமையிலான கூட்டணியில் உள்ள காங்கிரசுக்கு ஈரோடு கிழக்கு தொகுதி ஒதுக்கப்பட்டு இருந்த நிலையில், தற்போது ஈரோடு கிழக்குத் தொகுதியில் திமுக நேரடியாக தனது வேட்பாளரை நிறுத்தி தேர்தலை சந்திக்கிறது.

அதன்படி, திமுகவின் கொள்கை பரப்பு இணைச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் சந்திரகுமாரை திமுக தலைவர் ஸ்டாலின் நேற்று முன்தினம் வேட்பாளராக அறிவித்துள்ளார். இந்த நிலையில் அதிமுக, தேமுதிக கட்சிகள் இந்த இடைத்தேர்தலில் போட்டியிடவில்லை என அறிவித்துள்ளன. நாம் தமிழர் கட்சி போட்டியிடும் என்று நேற்று கட்சித் தலைவர் சீமான் அறிவித்துள்ளார். ஆனால் இதுவரை வேட்பாளர் பெயர் அறிவிக்கப்படவில்லை.

இதே போல பாஜவும் போட்டியில்லை என அறிவித்துள்ளது. வேட்பு மனு தாக்கலின் இறுதி நாளான 17ம் தேதி (வெள்ளி) பிரதான கட்சிகளின் போட்டி பற்றிய இறுதி முடிவு தெரிய வரும்.

வருகிற 18ம் தேதி வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்படும். பின்னர் வேட்புனுக்களை வாபஸ் பெறுவதற்கான கடைசி நாள் 20ம் தேதியாகும். தொடர்ந்து பிப்.5ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. 8ம் தேதி சித்தோட்டில் உள்ள ஐஆர்டிடி கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

Erode East Assembly Constituency By-election Today is the Second day for filing Nomination.

Scanned with OKEN Scanner

தினமலர்
13 JAN 2025

# வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் 12 வகையான ஆவணங்களை சமர்ப்பித்து வாக்களிக்கலாம்

ஈரோடு, ஜன.13-

வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் 12 வகையான ஆவணங்களை சமர்ப்பித்து வாக்களிக்கலாம் என தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் 5ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இத்தேர்தலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும் அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர் வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும் என இந்திய தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள் அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பிக்க வேண்டும் என இந்திய தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி ஆதார் அட்டை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் பணி அட்டை, பேங்க் மற்றும் தபால் ஆபீஸ் கணக்கு புத்தகங்கள் (புகைப்படத்துடன் கூடியது), தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு ஸ்மார்ட் அட்டை, டிரைவிங் லைசென்ஸ், நிரந்தர கணக்கு எண் அட்டை, தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமை பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை.

பாஸ்போர்ட், புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், மத்திய மாநில அரசு பொதுத்துறை நிறுவனங்களால் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டை, பாராளுமன்ற, சட்டமன்ற, சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அலுவலக அடையாள அட்டை, மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்படும் தனித்துவமான இயலாமைக்கான அடையாள அட்டை உள்ளிட்ட 12 வகையான ஆவணங்களை சமர்ப்பித்து வாக்களிக்கலாம்.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையால் வாக்காளரின் அடையாளம் மெய்ப்பிக்கப்படுகின்ற போது வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள அச்சுப் பிழைகள், எழுத்துப் பிழைகள் முதலியவற்றை பொருட்படுத்த தேவையில்லை. ஒரு வாக்காளர் வேறொரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருப்பாரேயானால் அந்த அடையாள அட்டையையும், இந்திய தேர்தல் கமிஷன் காட்டும் ஆவணமாக பயன்படுத்தலாம்.

ஆனால் அந்த வாக்காளருடைய பெயர் அந்த வாக்குச்சாவடிக்குரிய வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். வாக்காளர் பெயர் வாக்குச்சாவடிக்கு அனுப்பப்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம்பெற்று இருந்தால் மட்டுமே அவர் வாக்குரிமையை செலுத்த தகுதியுடையவர் ஆவார். வெளிநாடு வாழ் இந்தியர்கள் தங்களது அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக அசல் பாஸ்போர்ட்டை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

If there is no voter ID card, Voters can submit any one of the 12 Documents to cast votes.

Scanned with OKEN Scanner

தினகரன் 13 JAN 2025

ஈரோட்டில் வாகனச் சோதனையில்

# ஜவுளி வியாபாரியிடம் ரூ.1.22 லட்சம் பறிமுதல்

## நிலை கண்காணிப்பாளர் குழுவினர் நடவடிக்கை

ஈரோடு, ஜன.13: ஈரோடு குமலன் குட்டையில், நிலை கண்காணிப்பாளர் குழுவினர் நடத்திய வாகன சோதனையில், உரிய ஆவணமின்றி கொண்டு வரப்பட்ட ரூ.1.22 லட்சம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் வழங்குவதை தடுக்க தேர்தல் பறக்கும் படை குழு, நிலை கண்காணிப்பாளர் குழுக்கள், தொகுதிக்குப்பட்ட இடங்களில் தீவிர வாகனச்சோதனை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் ஈரோடு அடுத்த குமலன்குட்டையில், நிலை கண்காணிப்பாளர் குழுவினர், நேற்று வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அவ்வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி போலீசார் சோதனை மேற்கொண்டனர். காரில், ரூ.1.22 லட்சம் ரொக்கம் இருந்தது.

காரை ஓட்டி வந்த நபரிடம் விசாரணை நடத்தினர். அந்த நபர், கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்காபுரத்தைச் சேர்ந்த ஜவுளி வியாபாரி பபு என்பதும், ஈரோட்டில் ஜவுளி துணிகள் வாங்க பணம் கொண்டு வந்ததும் தெரிய் வந்தது.

இருப்பினும், அவர் எடுத்து வந்த பணத்திற்கு உரிய ஆவணங்கள் இல்லை என்பதால், நிலை கண்காணிப்பாளர்கள் குழுவினர், பபுவிடம் இருந்த ரூ.1.22 லட்சத்தை பறிமுதல் செய்து, தேர்தல் கட்டுப்பாட்டு அறை அலுவலர்களிடம் ஒப்படைத்தனர்.

தொடர்ந்து, தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான மனிஷ் உத்தரவின் பேரில், அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது. உரிய ஆவணங்களை சமர்பித்து, பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு, பபுவிடம் தேர்தல் பிரிவு அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

Flying squad seized 1.22 Lakhs from a textile trader in Erode Vehicle checking.

Scanned with OKEN Scanner

தினகரன் 13 JAN 2025

### ஈரோடு கிழக்குத்தொகுதி இடைத்தேர்தல்

# இன்று 2வது நாளாக வேட்பு மனுத்தாக்கல்

ஈரோடு, ஜன.13: ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனுத்தாக்கல் கடந்த 10ம் தேதி தொடங்கியது. விடுமுறை நாட்கள் தவிர்த்து 10, 13, 17 என 3 நாட்கள் மட்டுமே வேட்பு மனுத்தாக்கல் செய்யமுடியும் எனும் சூழல் உள்ளது.

இதில், முதல் நாளான 10ம் தேதி 3 சுயேட்சை வேட்பாளர்கள் மட்டுமே வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, வேட்பு மனுத்தாக்கல் முற்பகல் 11 மணிக்கு தொடங்கி பிற்பகல் 3 மணி வரை நடைபெறுகிறது. பொது பிரிவு வேட்பாளர்களாக போட்டியிடுபவர்கள் ரூ.10 ஆயிரமும், எஸ்சிஎஸ்டி பிரிவை சேர்ந்த வேட்பாளர்கள் ரூ.5 ஆயிரமும் டெபாசிட் தொகையாக செலுத்த வேண்டும்.

வேட்பு மனுதாக்கலின் போது, விதிமுறைகளின்படி வேட்பாளருடன் சேர்த்து 5 பேர் மட்டுமே வேட்பு மனுத்தாக்கல் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

வேட்பாளர் மற்றும் அவருடன் வருபவர்களுக்கு 3 கார்கள் மட்டுமே அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இதில், வேட்பாளரின் கார் மட்டும் வேட்பு மனுத்தாக்கல் செய்யும் அலுவலகத்திலிருந்து 100 மீட்டர் வரை வருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. உடன் வருபவர்களின் கார்கள் 200 மீட்டருக்கு முன்பாகவே நிறுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக மாநகராட்சி அலுவலகத்தை சுற்றி 4 திசைகளிலும் 100 மீட்டர், 200 மீட்டர் அளவில் எல்லைக்கோடுகள் அளவிடப்பட்டு வரையப்பட்டுள்ளன.

மேலும், வேட்பு மனுத்தாக்கலின்போது விதிமுறைகள் பின்பற்றப்படுவதை கண்காணிக்க தேர்தல் அதிகாரிகள் மற்றும் காவல் துறையினர் அமருவதற்கு தனியாக பந்தல் போடப்பட்டுள்ளது. வேட்பு மனுத்தாக்கல் செய்ய வந்த வேட்பாளர்களிடமிருந்து, தேர்தல் அலுவலர்கள் வேட்பாளர் படிவம், இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் டெபாசிட் தொகை ஆகியவற்றை சரிபார்த்த பின்னர், ஈரோடு கிழக்குத்தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான மனிஷிடம் வேட்பு மனுவைத்தாக்கல் செய்ய வேண்டும். இந்த நடைமுறைகள் முழுவதும் மாநகராட்சி அலுவலக வளாகம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்கள் மூலமாக கண்காணிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாநகராட்சி அலுவலக வளாகத்திலும், அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்நிலையில், 2வது நாளாக இன்று (13ம் தேதி) முற்பகல் 11 மணிக்கு தொடங்கி பிற்பகல் 3 மணி வரை வேட்பு மனுத்தாக்கல் நடைபெறவுள்ளது. வேட்பு மனுத்தாக்கலுக்கான இறுதி நாள் வரும் 17ம் தேதி ஆகும். தொடர்ந்து, 18ம் தேதி வேட்பு மனுக்க்ள் பரிசீலனை செய்யப்பட்டு வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்படும். 20ம் தேதி வேட்பு மனுக்களை வாபஸ் பெறலாம். தொடர்ந்து, பிப்ரவரி 5ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

8ம் தேதி, சித்தோட்டில் உள்ள அரசினர் பொறியியல் கல்லூரியில் (ஐஆர்டிடி) வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

Erode East Assembly Constituency By-election
Today is the Second day for filing Nomination.

Scanned with OKEN Scanner

தினகரன் 13 JAN 2025

# வெறிச்சோடி காணப்பட்ட மாநகராட்சி அலுவலகம்



▶ ஈரோடு கிழக்குத்தொகுதி தேர்தலையொட்டி கடந்த மூன்று நாட்களாக ஈரோடு மாநகராட்சி பரபரப்பாக காணப்பட்ட நிலையில் நேற்று விடுமுறை என்பதால் வெறிச்சோடி காணப்பட்டது.

Deserted Erode Corporation Office due to holiday.

Scanned with OKEN Scanner

தினகரன் 13 JAN 2025


வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு

# கணினி சுழற்சி முறையில் முதல் கட்ட பணி ஒதுக்கீடு

ஈரோடு, ஜன.13: ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இந்த தொகுதியில் 237 வாக்குச் சாவடிகள் உள்ளன. இத்துடன் 20% கூடுதல் எனும் அளவில், 284 முதன்மை அலுவலர்களும், 284 முதல் நிலை அலுவலர்களும், 284 இரண்டாம் நிலை அலுவலர்களும், 284 மூன்றாம் நிலை அலுவலர்களும், மேலும் 1,200 வாக்காளர்களைக் கொண்ட வாக்குச் சாவடிகளுக்கு 58 நான்காம் நிலை அலுவலர்கள் என மொத்தம் 1,194 அலுவலர்கள் பணியாற்ற உள்ளனர்.

இந்த வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு முதற் கட்ட பயிற்சி வகுப்பு வரும் 19ம் தேதி நடைபெற உள்ளது.

இந்த நிலையில், இவர்களுக்கான முதல் கட்ட பணி ஒதுக்கீடு கணினி சுழற்சி முறையில் நேற்று ஒதுக்கீடு செய்யப்பட்டது.



ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலையொட்டி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு கணினி மூலம் முதல் கட்ட பணி ஒதுக்கீட்டினை கலெக்டர் ராஜகோபால் சுன்கரா வழங்கினார்.

ஈரோடு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா தலைமையில் நடைபெற்ற இந்த பணி ஒதுக்கீட்டில் ஈரோடு கிழக்குத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான மனிஷ், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முகமது குதரத்துல்லாம் தனித்துணை ஆட்சியர் செல்வராஜ், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜன், தேர்தல் தாசில்தார் சிவசங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

Election duty for Booth Officials allotted by randomisation

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 13 JAN 2025

# பா.ம.க., கவுன்சிலரிடம் ரூ.1.22 லட்சம் பறிமுதல்

**ஈரோடு, ஜன. 13-**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்காக, பறக்கும் படையினர் வாகன தணிக்கை செய்து வருகின்றனர். ஈரோடு, குமலன்குட்டை பகுதியில் ஒரு காரில் சோதனையிட்டனர். காரில் வந்தவரிடம், 1 லட்சத்து, 22,000 ரூபாய் இருந்தது. ஆனால், உரிய ஆவணம் இல்லை.

காரில் வந்தவர்களிடம் விசாரித்தபோது கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தை சேர்ந்த பா.ம.க, கவுன்சிலர் பப்லு உட்பட மூன்று பேர் பொங்கல் பண்டிகைக்காக தங்கள் வார்டு மக்கள், நிர்வாகிகளுக்கு வழங்குவதற்காக புத்தாடை வாங்க ஈரோடு வந்தது தெரியவந்தது. ஆனாலும் தொகையை பறிமுதல் செய்த பறக்கும் படையினர், தேர்தல் நடத்தும் அலுவலர் மணீஷ் உத்தரவுப்படி, கருவூலத்தில் செலுத்தினர். இதுவரை, 4 லட்சத்து, 52,860 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

Rs.1.22 Lakhs seized from a PMK councillor.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 13 JAN 2025

# இன்று 2வது நாளாக வேட்பு மனுத்தாக்கல்

ஈரோடு, ஜன. 13-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வேட்புமனுத் தாக்கல் கடந்த, 10ல் தொடங்கியது. 17ம் தேதி வரை மனு செய்யலாம். பொங்கல் விடுமுறையால், கடந்த, 10, இன்று, 17ம் தேதி என மூன்று நாட்கள் மட்டுமே மனுத்தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது. கடந்த, 10ல் நடந்த வேட்பு மனுத்தாக்கலில், 3 சுயேட்சைகள் மனுத்தாக்கல் செய்தனர். இரண்டாவது நாளாக வேட்பு மனுத்தாக்கல், மாநகராட்சி அலுவலகத்தில் இன்று நடக்க உள்ளது. அ.தி.மு.க., – தே.மு.தி.க., – பா.ஜ., போட்டியிடாததால், தி.மு.க., உட்பட சில கட்சிகள், சுயேட்சைகள் மட்டுமே வேட்பு மனுத்தாக்கலுக்கு வாய்ப்புள்ளது.

Today is the Second day for filing Nomination.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 13 JAN 2025

# இடைத்தேர்தல் பணியில் 1,194 அலுவலர் நியமனம்

**ஈரோடு, ஜன. 13-**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் ஓட்டுச்சாவடிகளில் பணியாற்ற உள்ள அலுவலர்களுக்கு, கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா முன்னிலையில், தேர்தல் ஆணைய இணையதளம் மூலம், கணினி சுழற்சி முறையில் முதற்கட்ட பணி ஒதுக்கீடு நேற்று செய்யப்பட்டது. தொகுதியில், 237 ஓட்டுச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. கூடுதலாக, 20 சதவீதம் என சேர்த்து, 284 ஓட்டுச்சாவடியாக கணக்கில் கொள்ளப்படுகிறது.

இதற்காக தலா, 284 முதன்மை அலுவலர், முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை அலுவலர்கள் மற்றும் 1,200 வாக்காளர்களை கொண்ட ஓட்டுச்சாவடிகளுக்கு கூடுதலாக, 58 நான்காம் நிலை அலுவலர்கள் என, 1,194 அலுவலர்கள் பணியாற்ற உள்ளனர். இவர்களுக்கு முதற்கட்ட பயிற்சி வகுப்பு வரும், 19ல் ரங்கம்பாளையம் ஆர்.ஏ.என்.எம்.கலை மற்றும் அறிவியல் கல்லுாரியில் நடத்த திட்டமிடப்பட்டு அதற்கான பணி தொடங்கியுள்ளது.

1194 Polling Officials appointed for By-election.

Scanned with OKEN Scanner

தினமணி 13 JAN 2025

# திமுக வேட்பாளர் ஜன. 17-இல் வேட்பு மனு தாக்கல்

ஈரோடு, ஜன. 12: ஈரோடு கிழக்கு தொகுதி திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் ஜனவரி 17-ஆம் தேதி வேட்புமனு தாக்கல் செய்வார் என்று வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்தார்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் தொடர்பாக திமுக கூட்டணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஈரோட்டில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. திமுக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்பி தலைமை வகித்து திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை அறிமுகம் செய்து வைத்தார். திமுக ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் என்.நல்லசிவம் வரவேற்றார்.

இதில், வீட்டுவசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி பேசியதாவது:

ஈரோடு கிழக்கு தொகுதியில் திமுக வேட்பாளர் போட்டியிட காங்கிரஸ் தனது இடத்தை ஒதுக்கிக் கொடுத்துள்ளது. இத்தொகுதியில் காங்கிரஸ் சார்பில் திருமகன் ஈவெரா, ஈவிகேஎஸ் இளங்கோவன் போட்டியிட்டபோது கூட்டணியில் அனைவரும் இணைந்து பணியாற்றினோம். கடந்த தேர்தலில் 66,000 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றோம். அதன்பின், முதல்வர் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி உள்ளதால் 1.20 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என்றார்.



சு.முத்துசாமி

தொடர்ந்து அமைச்சர் சு.முத்துசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஈரோடு கிழக்கு தொகுதி திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் வருகிற 17-ஆம் தேதி நண்பகல் 12 மணிக்கு வேட்பு மனு தாக்கல் செய்வார். தேர்தலை அதிமுக புறக்கணிப்பதாக அறிவித்துள்ளது குறித்து கருத்து கூற ஏதுமில்லை. முதல்வர் மு.க.ஸ்டாலின் அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றியுள்ளார். எனவே, மக்களை எளிதாக சந்தித்து நிறைவேற்றப்பட்ட திட்டங்களை கூறி வாக்கு சேகரிப்போம் என்றார் அவர்.

DMK Candidate files nomination on Jan'17.

Scanned with OKEN Scanner